Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

10.11.2025
ஊடக வெளியீடு

**DATO' IR. PATHMANATHAN K.**
CEO, PBAPP and PBA Holdings Bhd.

## தெலுக் பஹாங் அணை: PBAPP "சிறந்த பராமரிப்பு"க்கான அனைத்துலக விருதை வென்றது

- **அணை பாதுகாப்பு மேலாண்மை மற்றும் பொறியியல் தொடர்பான 3வது அனைத்துலக மாநாடு 2025 இல் "சிறந்த அணை பராமரிப்பு" விருது வென்றது**

பினாங்கு, திங்கள், 10.11.2025: தெலுக் பஹாங் அணை தொடர்பாக "சிறந்த அணை பராமரிப்பு"க்கான அனைத்துலக விருதை PBAPP வென்றுள்ளது.

"சிறந்த அணை பராமரிப்பு"க்கான விருதை 5.11.2025 அன்று PBAPP இன் சிறந்த அர்ப்பணிப்பு மற்றும் சிறப்பை அங்கீகரிக்கும் விதமாக, 3வது அனைத்துலக அணை பாதுகாப்பு மேலாண்மை மற்றும் பொறியியல் மாநாடு 2025 (ICDSME 2025) வழங்கியது.

இந்த விருது, தெலுக் பஹாங் அணையை மலேசியாவின் பாதுகாப்பான செயல்பாட்டு அணைகளில் ஒன்றாக நிர்வகிப்பதிலும் பராமரிப்பதிலும் PBAPP மேற்கொண்ட முயற்சிகளை அங்கீகரிக்கிறது. இது இன்றைய அணையின் நிலையை அடிப்படையாகக் கொண்டது.

### விருதுக்கான அடைவுநிலை

ICDSME விருதுக்கான காரணங்களைப் பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம்:

- 3 அனைத்துலக ISO அளவுகோல்களின்படி அணை மேலாண்மை: தரம் மற்றும் தொடர்ச்சியான மேம்பாட்டிற்கான ISO 9001:2015; தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பிற்கான ISO 45001:2018; மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் பாதுகாப்பிற்கான ISO 14001:2015.

- கட்டமைப்பு ஒருமைப்பாடு மற்றும் நீண்டகால மீள்தன்மையை உறுதி செய்வதற்கான தடுப்பு ஆய்வுகள், மூன்றாம் தரப்பு மதிப்பீடுகள்

மற்றும் சொத்து மறுவாழ்வு.

- சமூக பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அவசரகால செயல் திட்டங்கள், அவசரகால பயிற்சிகள் மற்றும் பங்குதாரர் விழிப்புணர்வு திட்டங்கள். PBAPP செயல்படுத்துவதற்காக ஒரு விரிவான அவசரகால செயல் திட்டத்தை (EAP) திட்டமிடுகிறது.

- அனைத்துலக டிராகன் படகு பந்தய நிகழ்ச்சிகளை (சாத்தியமானால்) நடத்துதல், பள்ளி மாணவர்களுக்கான மரம் நடுதல் மற்றும் நீர் விழிப்புணர்வு திட்டங்கள் உள்ளிட்ட பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு (CSR) முன்முயற்சி திட்டங்கள் வழிநடத்துதல்;

- 'பைசோமீட்டர்கள்', நில அதிர்வு 'சென்சர்ஸ்' மற்றும் 24 மணி நேர சி.சி.டி.வி கண்காணிப்பு போன்ற
அணை கண்காணிப்பு அமைப்புகள் மற்றும்
கருவிகளைப் பயன்படுத்துதல்.

  தினசரி பயனுள்ள திறன் அளவீடுகள் ("எச்சரிக்கை 1", "எச்சரிக்கை 2" மற்றும் "அவசரமான" அளவீடுகளுக்கான முன் அமைக்கப்பட்ட 'parameters').

- மூல நீர் தரக் கட்டுப்பாடுகள்: தினசரி நேரடி பரிசோதனைகள், வாராந்திர படகு ரோந்துகள் மற்றும் மாதாந்திர மூல நீர் மாதிரி எடுத்தல் மற்றும் சோதனை செய்தல்.

- நீர்ப்பிடிப்புப் பகுதியில் தினசரி காட்சி ஆய்வுகள், கருவி அளவீடுகள் மற்றும் மழைப்பொழிவு பற்றிய பதிவுகள்.

- பசுமையான பொழுதுபோக்குப் பகுதியாகவும் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் இடமாகவும் அணையை தினமும் பொதுமக்களுக்கு பாதுகாப்பாகத் திறந்து வைத்திருத்தல்.

- தினசரி காட்சிப் பரிசோதனைகள், கருவி அளவீடுகள் மற்றும் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழைப்பதிவுகள் ஆகியவற்றின் பதிவுகள்.

- பசுமையான பொழுதுபோக்குப் பகுதியாகவும் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் இடமாகவும் அணையை தினமும் பொதுமக்களுக்குப்

பாதுகாப்பாகத் திறந்து வைத்திருத்தல்.

## வரலாறு & பின்னணி

தெலுக் பஹாங் அணை 1999-ஆம் ஆண்டு மலேசியாவின் துணைப் பிரதமரான மறைந்த துன் அப்துல்லா அகமது படாவியால் அதிகாரப்பூர்வமாகத் திறக்கப்பட்டது. இதன் அதிகபட்ச திறன் 18,240 மில்லியன் லிட்டர் (ML) ஆகும். மேலும், இது பினாங்கு தீவின் வடக்குப் பகுதிகளில் உள்ள கடற்கரை சுற்றுலாப் பகுதி மற்றும் குடியிருப்புப் பகுதிகளின் நீர் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக குறிப்பாகக் கட்டப்பட்டது.

அணையின் சேவைப் பகுதி தெலுக் பஹாங், பத்து பிரிங்கி, தஞ்சோங் பூங்கா மற்றும் தஞ்சோங் தோகோங் ஆகியவற்றை உள்ளடக்கியது. அதிகபட்ச நீர் பரப்பளவு 0.95 சதுர கி.மீ, கொண்ட தெலுக் பஹாங் அணை, அதன் அருகிலுள்ள 9.84 சதுர கி.மீ நீர்ப்பிடிப்பு பகுதியில் (WCA) முதன்மையாக மழைப்பொழிவால் நிரப்பப்படுகிறது.

PBAPP ஒரு தற்செயல் மறு நிரப்புதல் திட்டத்தையும் கொண்டுள்ளது. இது சுங்கை பினாங்கு WCA மற்றும் பத்து பிரிங்கி WCA ஆகிய 2 WCA-களில் இருந்து மூல நீரை எடுத்து அணையை மீண்டும் நிரப்ப முடிந்தது.

அணையின் செயல்திறன் 16.0% ஆகக் குறைந்த பிறகு, இந்தத் திட்டம் கடைசியாக 2020 செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதத்தில் செயல்படுத்தப்பட்டது. இந்த அசாதாரண செயல்திறன் கடந்த 2019 ஆகஸ்ட் முதல் 2020 ஜூலை வரையிலான காலகட்டத்தில் தெலுக் பஹாங் WCA இல் அசாதாரணமாக குறைந்த மழைப்பொழிவுடன் நேரடியாக தொடர்புடையது.

2021 வறண்ட காலம் தொடங்குவதற்கு முன்னதாக, 1.1.2021 அன்று, தெலுக் பஹாங் அணையின் செயல்திறன் 58.7% ஆக மீண்டது.

எனவே, தெலுக் பஹாங் அணை அதன் 26 ஆண்டுகால சேவை வரலாற்றில் "வறண்டதில்லை".

**Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd**
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

**தெலுக் பஹாங் அணையின் நிலை (9.11.2025)**

இந்த ஆண்டு தெலுக் பஹாங் அணையின் மிகக் குறைந்த நீர் கொள்ளளவு 100 நாட்கள் வெப்பமான மற்றும் வறண்ட வானிலைக்குப் பிறகு, 10.4.2025 அன்று 45.6% ஆகப் பதிவாகியது.

கடந்த 1.9.2025 முதல் 9.11.2025 வரையிலான அண்மைய 90 நாட்களில், தெலுக் பஹாங் WCA இல் PBAPP மொத்தம் 999.5மி.மீ மழையைப் பதிவு செய்துள்ளது. இதன் விளைவாக, அணையின் பயனுள்ள கொள்ளளவு 9.11.2025 அன்று 83.6%ஐ எட்டியுள்ளது.

2025 நவம்பரில் அதிக மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுவதால், தெலுக் பஹாங் அணையின் நீர்மட்டம் மேலும் அதிகரிக்கக்கூடும். இருப்பினும், 2025 டிசம்பர் வறண்ட மாதமாகவும் இருக்கலாம் என்றும் வானிலை முன் அறிவிப்புகள் குறிப்பிடுகின்றன.

எதிர்பாராத சூழ்நிலைகளைத் தவிர்த்து, தெலுக் பஹாங் அணையானது தெலுக் பஹாங், பத்து பிரிங்கி, தஞ்சோங் பூங்கா, தஞ்சோங் தோகோங் மற்றும் மவுண்ட் எ.்ஸ்கிரின் ஆகிய இடங்களில் உள்ள சுமார் 37,000 பயனீட்டாளருக்கு, 1.1.2026 முதல் தொடங்கும் வறண்ட பருவத்தில் உதவ "நல்ல நிலையில்" உள்ளது.

நன்றி.

---

எழுத்தாக்கம் : Syarifah Nasywa bt Syed Feisal Barakbah
Corporate Communications Section
மின்னஞ்சல் :: comms@pba.com.my